ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க இலக்கியங்களில் இசை

ச.ரம்யா,

இசைத்துறை,

முனைவர் பட்டபடிப்பு பிரிவு,

வேல்ஸ் பல்கலைக்கழகம்,

சென்னை - 600117.

முகப்பு:

உலகின் தொன்மையான மொழிகளில் நமது தமிழ் மொழியும் ஒன்று. பழமையான பாரம்பரியத்தைக் விளங்கும் நமது தமிழ் மொழியில் சங்க காலம் முதலே அதன் சிறப்பை எடுத்துக்காட்டும் பல இலக்கியங்கள் உள்ளன. அவற்றின் நமது இசையின் சிறப்பும் கூறப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை ஆராய்ந்து காணலாம்.

ஆய்வின் நோக்கம் :

தமிழ் மொழியின் சிறப்பை கூறும் சங்க இலக்கியங்கள் பல. அவை முத்தமிழின் களஞ்சியமாக மிளிர்கிறது.  சங்க காலத்து நூல்களில் காணப்படுகின்ற செய்திகள் வாயிலாக பண்டைய மக்களின் வாழ்க்கைமுறையை அறியலாம். அவர்களின் வாழ்வில் இசையின் பங்கு எத்தகையது என்று அறிவதே ஆய்வின் நோக்கம்.

ஆய்வுச்சுருக்கம்:

தொன்மையான மொழியான தமிழின் பெருமை சொல்வதாக பல இலக்கிய நூல்கள் உள்ளது. அவற்றில் காணப்படுகின்ற இசை செய்திகளை ஆய்ந்து அதன் மூலம் பண்டைய மக்களின் கலை ஆர்வத்தை , அவர்கள் வாழ்வில் இசையின் பங்கை எடுத்துக்காட்டும் இந்த ஆய்வு.

முன்னுரை:

"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி" நமது தமிழ்குடி. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த பண்பாடோடும், கலாச்சாரத்தோடும் வாழ்ந்தவர்கள் நம் தமிழ் மக்கள். அவர்களின் வாழ்வு தமிழோடும் இசையோடும் வளர்ந்தது என்று கூறலாம். இவர்கள் தங்கள் வாழ்வை இயற்கையோடும், இசையோடும் கழித்தனர். இதற்குச் சான்றாக நமது இலக்கியங்கள் இசை பற்றிய செய்திகளோடு விளங்குகிறது.

இசை பற்றிய செய்திகள் திருவள்ளுவரின் காலம் முதல் இலக்கியத்தில் இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாய் "குழல் இனிது யாழ் இனிது என்பர்"- என்ற குறள் அமைந்துள்ளது . பல இசை செய்திகளை எடுத்துக் கூறும் நூலான கருணாமிர்த சாகரம் என்ற நூல் இசையை "பேரிலக்கணம்" என்று கூறுகிறது . இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் பல இசை செய்திகளோடு அமைந்துள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்

இலக்கியங்களில் இசை

இசையை விரும்பாத உயிரினம் இவ்வுலகில் இருப்பதில்லை என்று கூறலாம். இசைக்கான பல இலக்கண நூல்களைக் கொண்டது நமது தமிழ்மொழி. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இசை பற்றி பல செய்திகள் உள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பண்களை வகுத்து யாழை இசைத்து வந்தனர் என்பதைக் கூறும் பல நூல்கள் சான்றுகளாக விளங்குகிறது. "பெருநாரை", "பெருங்குருகு", "இசை நுணுக்கம்" போன்ற பல இசை நூல்கள் இருந்ததாகவும், அவை காலத்தால் மறைந்து போனதை பற்றிய சான்றுகள் நம்மிடம் உள்ளது. "ஆடல் பாடல் இசையே தமிழே பண்ணே பாணி தூக்கமே"- என்கிறது சிலப்பதிகாரம். இவ்வாறாக இசை நமது இலக்கண இலக்கியங்களில் எங்கும் நிறைந்துள்ளது என்று கூறலாம். நமக்கு கிடைத்த முதல் இலக்கிய நூலான தொல்காப்பியமும் இசைக்கான சான்றுகளோடு உள்ளது

தொல்காப்பியம்

பழமையான பண்பாடு கொண்ட நமது முன்னோர்கள், மொழிகளில் மூத்த மொழியான நமது தமிழ் மொழியை முத்தமிழ் பிரித்தனர். இயல், இசை,

நாடகம் என்றனர். இயல் என்பது நடைமுறை தமிழாகவும், இசைத்தமிழ் என்பது பாட்டோடு கலந்ததாகும், கூத்து என்பது நாடகம் அல்லது நடன மாகவும் கொண்டு வாழ்ந்து வந்தனர். நமக்கு கிடைக்கும் பழமையான இலக்கிய நூலான தொல்காப்பியத்தில் தமிழர்கள் அவர்கள் வாழும் நிலத்தை ஐந்து ஐந்தாக பிரித்து முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்று வகைப்படுத்தி அவற்றுக்குத் தனித்தனி பண்கள் அமைத்ததாக செய்களை காணமுடிகிறது. அவற்றை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்று பெயரிட்டதாகவும் ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப தனியாக யாழ் வாசிக்கும் முறையை கொடுத்ததாகவும் தொல்காப்பியம் கூறுகிறது . தொல்காப்பியர் பல வகையான களிப்பாக்கு இலக்கணம் கூறியுள்ளார் தேவபாணி என்பது பழந்தமிழரின் இசை பாட்டு என்கிறார் அவர் தமிழின் எழுத்துக்களும் இசையோடு உயிர் மெய்யாக பொருந்திய வரும் என்பதை

" அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீட்டலும்

உளவென மொழிப இசையோடு சிவணிய

நரம்பின் மறைய என்றனர் புலவர்" என்ற செய்யுள் முலம் அறியலாம்.

இசையோடு மட்டுமல்லாது தமிழர்கள் தங்கள் வாழ்வினையே ஆடிப்பாடி கழித்தும் உள்ளனர் அவ்வாறு ஆடலைப் பற்றி கூறும்பொழுது

"நகையே அழுகை இனி வரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று அப்பாலெட்டே மெய்ப்பாடென்ப" - என்றும் கூறுகிறார் தொல்காப்பியர். இசைக்கலைஞர்களை பாணர்கள் என்றும் நாட்டிய கலைஞர்கள் கூத்தர்கள் என்றும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம்

தமிழ்மொழியின் ஐம்பெரும் காப்பியங்களாக சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை, சீவக சிந்தாமணி என்பவை அழைக்கப்படுகிறது. இவற்றில் சிலப்பதிகாரம் இசை மற்றும நடனம் பற்றிய பல செய்திகள் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று பிரிவுகளிலும் ஏறத்தாழ பதினைந்து காதைகள் இசை பற்றிய செய்திகளோடு அமைந்துள்ளது. அதிகம் ஆய்ச்சியர் குரவை, அரங்கேற்றுக்காதை, வேனில் காதை ,நடுகற் காதை என்ற நான்கு காலங்களில்

இசை பற்றிய பல செய்திகள் காணப்படுகிறது. இன்றளவும் நமது இசையின் சிறப்பை எடுத்துக்காட்டும் நூலாக சிலப்பதிகாரம் விளங்குகிறது. மூன்றாவது காலியான அரங்கேற்றுக் காதையில் நடன ஆசான் இசை ஆசான் புலவன் தன் போன்றவர்களின் தகுதிகளை இளங்கோவடிகள் விவரித்துள்ளார். சிலப்பதிகாரத்தில் வட்டப் பாலையில் தோன்றும் நான்கு பண்கள் என்று பாலையாழ் குறிஞ்சியாழ், மருதம்யாழ், செவ்வழி யாழ் போன்றவற்றைப் பற்றி குறிப்புகள் காணப்படுகிறது. பண்கள் என்பதும் பாலை என்பதும் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டது என்றும் பயணப்படுவது என்றும் எட்டு வகையான முறைகளும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. அவை எடுத்தல், படுத்தல்,நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்பவை என்கிறது. இவ்வாறு பாடும் முறை பற்றியும் நூற்றி மூன்று பெண்களைப் பற்றியும் இசைக் கருவிகளைப் பற்றியும் தாளங்களை பற்றியும் கூட சிலப்பதிகாரம் எடுத்தியம்புகிறது.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்

பத்துப்பாட்டும் என்பது திருமுருகாற்றுப்படை பொருநர் ஆற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை மலைபடுகடாம் என்னும் பத்து வகையான சங்க இலக்கிய நூல்களின் தொகுப்பாகும். இவை பழம் தமிழர்களின் பண்பாடும் வாழ்க்கைமுறையும் இயற்கையும் அரசின் மற்றும் இசை மற்றும் கூத்து போன்றவை பற்றியும் பல இசைக் கருவிகளைப் பற்றிய செய்திகளையும் இவற்றில் காணலாம் உதாரணமாக அக்காலத்தில் குறள் என்னும் இசைக்கருவியின் துளைகளை கண்கள் என்று குறிப்பிடுவார். அதை "கண்இடை விடுத்த கயிற்றுக் தூம்பு"- இன்னும் வரியில் இருந்து அறியலாம். இவ்வாறாக பல இசை செய்திகளில் பத்துப்பாட்டில் காணப்படுகிறது. இவை நமது தமிழ் மக்களின் சிறந்த நாகரிக வாழ்வுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

எட்டுத்தொகை நூல்கள் என்பதும் நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு என்னும் நூல்களின் தொகுப்பே ஆகும் இவற்றில் சில பாடுவதற்கு என்றே ஏற்பட்டவை பத்துப்பாட்டு பரிபாடல் முதலியவை இசை மற்றும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளோடு அமைந்துள்ளது பரிபாடலில் பாடலை பாடியவர் ஒருவராகவும்

இசையமைத்தவர் உருவாகும் இருப்பதை காணமுடிகிறது கண்ணநாகனார் என்பவர் நல்லச்சுதனார் இயற்றிய பாடலுக்கு இசையமைத்து உள்ளார். இதில் குழலும் யாழும் கூட கூறப்பட்டுள்ளது

" கைவைத்திமிர்புகுழல் ஆங்கு ஒரு மியாழின்

இளிகுரல் சமங்கொள்வோரும்" - என்கிறது. பறை மற்றும் சங்கங்கள் திருமணத்தின்போது அளிப்பவையாக கூறப்பட்டுள்ளன "பறை பதப்பணிலம் ஆர்ப்ப" . இதில் பணிலம் என்றால் சங்கு . குறிஞ்சி நில மக்களின் பறை தொண்டகப்பறை எனப்பட்டது. இவ்வாறு பறை பற்றியும் சங்குகளை பற்றியும் மேலும் பல இசை கருவிகளைப்பற்றியும் குறுந்தொகையில் பல செய்திகள் உள்ளது. புல்லாங்குழலை " கொன்றைத்தீங்குழல் " என்றும் " ஆம்பல் தீங்குழல் " என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு பறைகளைப் பற்றியும் தன்னும்மை பற்றியும் குறுந்தொகையில் பல செய்திகள் உள்ளது புல்லாங்குழலை " கொன்றைத்தீங்குழல் " என்றும் " ஆம்பல் தீங்குழல் " என்றும் குறிப்பிடுகின்றனர்.

மற்ற இலக்கியங்கள்

இசை பற்றி பெருங்கதையில் பல குறிப்புகள் உள்ளது. தாளத்தோடு சேர்ந்த பாடலை ஆசிரியர் "பாடல் பாணியோடு" என்று குறிப்பிடுவதாக கூறப்படுகிறது. இதில் வீணை யாழ் போன்றவை யோடு பெண்கள் பற்றிய ஏழு பாறைகளை பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான "சீவக சிந்தாமணி"-யின் நாயகன் "சீவகன்", யாழ் இசைப்பதில் வல்லவனாக சித்தரிக்கப்படுகிறான். நாயகியோ வீணை இசையில் வல்லவள் என்பதை "தீந்தொடை மகர வீணை "என்ற குறிப்பிலிருந்து காணமுடிகிறது. இந்த நூலில் யாழைப்பற்றியும், பண்களைப் பற்றியும், முரசைப் பற்றியும், சங்கு, தண்ணுமை ஆகிய இசைக் கருவிகளைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகிறது.

பெரியபுராணம் என்னும் நூலில் பழந்தமிழர்கள் இசைக்கருவிகளின் குழுவைக் கொண்டிருந்தனர் என்றும் இந்த இசைக்குழு திருமணத்தின் போது ஆடல் பாடல் முதலியவை நிகழ்த்தியுள்ளன என்பதை " மங்கல கீதநாத மறையவர்

குழாங்களோடும்"- என்ற வரியின் மூலம் அறியலாம். சங்குகள் திருமணத்தின் போது ஒலிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. சேக்கிழார் பெரிய புராணத்தில் கந்தர்வர்களைப் பற்றியும், விஞ்சையரையும் பற்றியும் பல செய்திகள் தருகிறார் அவர்களின் இசை நூலை ஏழிசை நூல் என்கிறார் .

இதை " ஏழிசைநூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார்" - என்பதில் அறியலாம்.இவ்வாறாக கல்லாடம் திவாகர மற்றும் பிங்கல நிகண்டுகள் போன்ற பல இலக்கிய நூல்களில் இசை பற்றிய செய்திகள் காணப்படுகிறது செய்திகளின் மூலம் எப்படி பழந்தமிழர்கள் தங்கள் வாழ்வில் இயற்கையோடும் இசையோடும் கலந்து இன்புற்று வாழ்ந்தனர் என்பது தெரியவருகிறது.

முடிவுரை

தமிழரின் பாரம்பரியமானது நுன்கலைகளை வளர்க்கும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆயக்கலைகள் அறுபத்தி நான்கு என்று எடுத்து பாடுகிறார் பாரதியார். கடலளவு கொண்ட நமது தமிழ் இலக்கியங்களில் இருந்து அணு அளவு எடுத்துக் கொண்டு ஆராய்ந்ததில் இத்தனை இசை செய்திகளில் கிடைக்கின்றது என்றால் நமது தமிழரின் பண்பாடும் கலைத்திறனும் நம்மை வியக்க வைக்கின்றது. இவைகளை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறி, உலகெங்கும் நமது தமிழரின் நாகரிகத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். எங்கும் தமிழ் முழக்கம் நிகழ வேண்டும். எத்தனை கால மாற்றம் வந்தாலும் தமிழின் சிறப்பும், தமிழரின் சிறப்பும் என்றும் குறையாது. இனிவரும் காலங்களில் தமிழ் தழைத்து ஓங்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை .

மேற்கோள் நூல்கள்:

சென்னை பல்கலைக்கழக இளங்கலை பாட நூல்- இசை வரலாறு- பக்கம்: 127 - 135.

சென்னை பல்கலைக்கழக முதுகலை பாட நூல்- பக்கம்: 1,15.

தொல்காப்பியம் மெய், நூற்பா எண்- 1197.

சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்- எஸ்- இராமநாதன் - முன்னுரைப் பகுதி.

தமிழ் இசை களஞ்சியம் - வீ.பா.கா சுந்தரம் - பாகம்-2, பக்கம் 19

தமிழிசைக் களஞ்சியம்- வீ.பா.கா. சுந்தரம் - பாகம்-2, பக்கம் 34 35

தமிழ் இசை இலக்கிய வரலாறு - மூஅருணாச்சலம்- பக்கம் - 31